நாள்: 06.12.2024
SC.113/2021
பெயர் சாமி
அ.சா.1

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பள்ளிக்கூடமே சென்றது கிடையாது. நான் புகாரை எழுதி தான் காவல்நிலையத்தில் கொடுத்தேன். காவல்நிலையத்தில் வெளியில் நின்றுகொண்டிருந்த ஒரு நபரை வைத்து எழுதினேன். பெயர் தெரியாது. நான் சொல்லி அவர் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்றும், எனக்கு கல்வியறிவு இல்லாததால் எனக்கு ஆங்கிலத்தில் புகார் எழுதியிருக்க வாய்ப்பில்லை. எனக்கு கல்வியறிவு இல்லாததால் ஆங்கிலத்தில் உள்ள மாத்திரை பெயர்கள் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மாத்திரை பெயர் Acitrom 1 mg என்று எனக்கு தெரியும். திறந்த நீதிமன்றத்தில் நான் கொடுத்த புகாரை என்னால் வாசிக்க இயலாது.நான் கம்பத்தில் டெய்லர் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் வட்டிக்கு கடன் வாங்கி தொழில் நடத்தியுள்ளேன். எனது மனைவி எனது தொழிலுக்கு கடன் வாங்கித்தருவாரா என்றால் வாங்கித்தருவார். ஆனால் நான் சொல்லும் நபரிடம் வாங்கித்தருவார்.அவர் கடன் வாங்கி தந்த நபரிடம் கடையில் வரும் வருமானத்தை வைத்து என் மனைவி தான் கடனை அடைப்பேன் என்றால் சரியல்ல.நான் தான் கடனை அடைப்பேன். நான் மருத்துவ சிகிச்சைக்கு செல்லும்போது மாத்திரையின் அளவு பற்றி மருத்துவர் என்னிடம் சொல்வது வழக்கம். என் மனைவியிடம் ஆஜர் எதிரிகள் நேரில் ஒன்றாக பேசியதை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. 4ம் எதிரி மணிவண்ணன் பேசியதை பார்த்துள்ளேன். மற்ற எதிரிகளான சுதாகர், பாண்டியராஜன் பேசியதை பார்ந்ததுள்ளேன். பாண்டியராஜன் என் கடையில் தான் வேலை பார்க்கிறார். நான் என் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறு ஒரு திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் என் மனைவி எனக்கு வாங்கி கொடுத் கடனிலிருந்து தப்பிப்பதற்காகவும் வேறு ஒரு திருமணம் செய்து கொள்வதற்காகவும் எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நாள்: 06.12.2024

SC.113/2021
பெயர். சஞ்சய்
அ.சா.2

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பத்திற்கு முன்பு நாங்கள் சந்தோசமாகத்தான் இருந்தோம்.

நாள்: 06.12.2024

SC.113/2021
பெயர். முத்துமாரி
அ.சா.3

**<u>குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 சாமி எனது கணவரின் பெரியப்பா மகன் ஆவார். சாமிக்கும் அவரது மனைவிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சுகந்தி செல்போனில் பேசி வந்தார். அதற்கு பின்னர் தான் அவர்களுக்குள் பிரச்சனை வந்தது. போலிஸ் விசாரணையில் இதுபோன்று தான் நான் சொல்லியுள்ளேன்.

நாள்: 06.12.2024

SC.113/2021
பெயர். ராஜேஸ்கண்ணன்
அ.சா.4

**<u>குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 சாமி எனது மருமகன். கூடலூர் தெற்கு காவல்நிலையத்தில் ஒரு பெண் காவலர் எழுதி நான் கையெழுத்து போட்டேன். நான் ஒரு கையெழுத்து போட்டேன். கேவசன் என்ற பையன் இன்னொரு கையெழுத்துது போட்டார். நான் ஒற்றைக் கையெழுத்தைத்தவிர வேறு கையெழுத்து போடவில்லை. அ.சா.1 சாமி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.